ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி- பத்மநாபா
ඊළම් ජනතා විප්ලවීය විමුක්ති පෙරමුණ - පත්මනාබා
EELAM PEOPLE'S REVOLUTIONARY LIBERATION FRONT-PATHMANABHA

## மேதின அறைகூவல் - 2006

மனித குலத்தின் இதுவரை கால வரலாறு வர்க்கப் போராட்டத்தின் வரலாறே என்று கார்ல்மாக்ஸ் தனது புகழ்பெற்ற கம்யூனிஸ் கட்சி அறிக்கையில் தெரிவித்திருந்தார்.

பின்தங்கியதிலிருந்து முன்னேறியதற்கு, காட்டுமிராண்டித் தனத்திலிருந்து நாகரீகத்துக்கு சுரண்டலில் இருந்து சுரண்டலற்ற சமுதாயத்துக்கு, ஒடுக்குமுறையிலிருந்து ஒடுக்குமுறையற்ற புதியதொரு உலக ஒழுங்கிற்கு என மனிதகுலம் மாற்றம் பெற்று வந்துள்ளது.

1880 களின் பிற்பகுதிகளில் ஈவிரக்கமற்று ஐரோப்பாவிலும் வட அமெரிக்காவிலும் நேரகால வரையறையின்றி சுரண்டப்பட்ட தொழிலாளர் வர்க்கம் ஆங்காங்கே தன்னெழுச்சியாக போராட்டங்களை நடாத்தி வந்திருக்கிறது.

இங்கிலாந்தில் சாட்டிஸ்ற் இயக்கம் தொழிற்சாலைகளை எரிப்பது அல்லது தொழிற்சாலை இயந்திரங்களை சேதமாக்குவது என தனது எதிர்ப்பைக் காட்டியது, பின்னர் போராட்ட அனுபவங்களின் அடிப்படையில் தன்னை பல்வேறு தொழிற்சாலைகளிலும் நாடுகளிலும் ஒழுங்குபடுத்தத் தொடங்கியது கார்ல்மாக்ஸ், எங்கல்ஸ் போன்ற தத்துவ அறிஞர்கள் தொழிலாள வர்க்கத்தின் போராட்டங்களுக்கான வழிகாட்டி நெறிகளை வழங்கினர். கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையும் வரலாற்றின் தேவையாக உருவாகிது.

மாக்ஸிஸசம் சமூக பொருளாதார பிரச்சினைகளை அது வரைகாலமும் அணுகப்பட்ட முறைகளுக்கு மாறாக விஞ்ஞான பூர்வமாக அணுகியது.

மனித குலத்தின் வரலாற்றில் வெவ்வேறு காலகட்டங்களில் ஒடுக்கப்பட்டவர்களின் கிளர்ச்சிகளை நாம் காணலாம். ரோமானியப் பேரரசின் அடிமை யுகத்தின் ஸ்பாட்டகஸ் கிளர்ச்சியை அவதானிக்கலாம்.

1800களின் நடுப்பகுதிகளில் பிரெஞ்சுப் புரட்சியை நாம் அவதானிக்கலாம், தொழிலாளி வர்க்கம் 72 நாட்கள் தனது ஆட்சி அதிகாரத்தை தக்கவைத்ததிருந்தது.

இதேபோன்றுதான எட்டு மணிநேர வேலை கோரி சிக்காக்கோ வீதிகளில் தொழிலாளர்கள் தமது இரத்தம் தோய்ந்த கொடிகளை தூக்கி ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

உலகின் பல்வேறு முதலா ளித்துவ நாடுகளில் தொழிலாளர்கள் கிளர்ச்சிகளை நடத்திக் கொண்டிருந்தார்கள். இந்தக் கிளர்ச்சிகளின் வெற்றியாகவே எட்டு மணி நேர வேலை என்பது அங்கீகரிக்கப்பட்டது, படிப்படியாக உலகம் பூராகவும் தொழிலாளி வர்க்கத்தின் அழுத்தத்தினால் எட்டுமணிநேர வேலையென்பது சட்டபூர்வமாக்கப்பட்டது. தொழிலாளர்கள் எட்டுமணிநேர உரிமையை பெற்ற அத்தினத்தையே நாம் மேதினமென நினைவு கூருகிறோம்.

வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகள் உலகை ஈவிரக்கமற்ற சுரண்டலுக்காக பங்கு போட்டிருந்தன. 1800களின் பிற் பகுதிகளிலும் 1900 முற்பகுதிகளிலும் சீனாவில் சஞ்யாட்சனும், தென்னாபிரிக்காவிலும் இந்தியாவிலும் காந்தியடிகளும் தேசிய சுதந்திரத்துக்காக தலைமையேற்று போராடினார்கள். ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகள் பலவற்றின் தேசிய சுதந்திரத்துக்கான போராட்டங்கள் நடைபெற்றன. இந்த இடையறாத போராட்டங்களின் ஊடாகத்தான் காலனிகளின் சுதந்திரமும் தொழிலாளி வர்க்கம் தற்போது அனுபவிக்கும் குறைந்தபட்ச உரிமைகளும் பெறப்பட்டன.

இலங்கையில் 1920 களின் பிற்பகுதிகளிலும், 1930 களின் முற்பகுதிகளிலும் தொழிலாளி வர்க்கம் கருக்கொண்டது. இன மத பேதங்களை கடந்த தொழிலாளர் ஒற்றுமை என்பதை அது வலியுறுத்தி நின்றது.

1940களில், 1950களில் தேசியங்களில் தனித்துவத்தின் அடிப்படையில் இலங்கையின் மக்களை ஒன்றிணைப்பதை அது வலியுறுத்தி நின்றது, இன வாதத்துக்கெதிராக போராடியது மலையகத்திலும் இலங்கையின் இரயில்வே துறைமுகங்களிலும் பஞ்சாலைகளிலும் பலம் கொண்ட தொழிற்சங்க பின்புலத்தை இடதுசாரி இயக்கம் கொண்டிருந்தது.

காலனி ஆதிக்கம் இலங்கையின் தென்பகுதியிலும், வடக்கிலும் தனது நிர்வாகத் தேவைகளுக்கான ஆட்களை இலங்கையின் உயர் குலத்திலிருந்து தெரிவு செய்தது.

எனவே மேல்வர்க்க அபிலாசைகளையே முழு சமூகத்தினதும் அபிலாசைகளாக முன்கொ ண்டு செல்லப்பட்டன, பெருவாரியான கிராமப்புறத்து மக்கள் முகமற்றவர்களாக இருந்தார்கள், இதில் சிங்கள கிராம மக்களின் அதிருப்திகளை பயன்படுத்தி, தேசிய வாழ்வில் அவர்களுக்கு இடமின்மையை பயன்படுத்தி இனவாதம் விதைக்கப்பட்டது.

மலையக தொழிலாளி வர்க்கம் இடதுசாரிகளுக்கு ஆதரவாக இருந்தபடியால் அவர்களின் வாக்குரிமையை, பிரஜா உரிமையை இலங்கையின் சுதந்திரத்தின் பின், பதவிக்கு வந்த ஆட்சியாளர்கள் பறித்தெடுத்தார்கள், காலனி ஆதிக்கத்தால் உருவாக்கப்பட்ட சேதங்களின் கதிர்வீச்சு அனர்த்தங்கள் எமது நாட்டில் பாரதூரமான தாக்கங்களை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறது.

கடந்த 20வருட யுத்தமும் 1970களின் முற்பகுதியில், 80களின் பிற்பகுதிகளில் தென் இலங்கையில் உருவாகிய கிளர்ச்சிகளும் இந்தப் பின்புலத்திலேயே பார்க்கப்படவேண்டும். சுனாமி அனர்த்தம் போன்ற பாரிய நெருக்கடிகளை எதிர்கொள்வதில் நாம் எதிர்நோக்கும் பாரிய பிரச்சினைகளிலும் காலனி ஆதிக்கக் காரர்களால் இந்த நாட்டில் விட்டுச் செல்லப்பட்ட அதிகாரத்துவ பாணியிலேயான நிர்வாக கட்டமைப்பே காரணமென்றால் அது மிகையல்ல.

தொழிலாளர்கள் சிக்காக்கோ ஆர்ப்பாட்டம் மூலம் சாதித்ததைப்போன்று 1910களின் பிற் பகுதிகளில் பெண்களின் சுதந்திரம் தொடர்பான இயக்கமும் வலுப்பெற்றது மார்ச் 8 சர்வதேச பெண்கள் தினாமாக பிரகடனம் செய்யப்பட்டது. இதேபோன்று ஐ.நா சபையினால் சர்வதேச மனித உரிமைகள் தினம், சர்வதேச சிறுவர் உரிமைகள் தினம் என பன்முகத்தன்மை வாய்ந்த உரிமைப்பிரகடனங்கள் தவிர தேசங்களின் உரிமைகள் தொடர்பாக கலாச்சாரப் பண்பாட்டு பாதுகாப்புகள் தொடர்பாக, சுற்றாடல், சுகாதாரம், வீட்டுரிமை பிரச்சனைகள் தொடர்பாக, நீர் வளங்களை பாதுகாப்பது தொடர்பாக இன்னும் பல விடயங்கள் தொடர்பில் ஆவணங்கள் ஐ.நா வில் உருவாக்கப்பட்டன.

ஆனால் இலங்கையில் சர்வதேச மாற்றங்களிலிருந்தும், உள்ளார்ந்த ஆற்றலில் இருந்தும் சில சில முன்னேற்றங்கள் இருந்தாலும் மிக முக்கியமான பாரிய பிரச்சனைகள் தீர்க்கப்படல் வேண்டும். இன முரண்பாட்டு யுத்தம் அறுபதாயிரம் மக்களை காவுகொண்டுவிட்டது. இயற்கை அனர்த்தம் நாற்பதாயிரம் உயிர்களை காவுகொண்டுவிட்டது. தமிழ் பாசிசம் ஒரு விஷ விருட்சமாக வளர்ந்து இன்று தமிழ் சமூகத்தின் சகல சிறந்த அம்சங்களையும் துவம்சம் செய்துள்ளது. சர்வதேச தரநிலைகளில் உலகில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஜனநாயகம் மனித உரிமைகள் வடக்குக் கிழக்கில் காணாமல் போன விடயங்களாகிவிட்டன புதிய தலைமுறைக்கு சுதந்திரமென்பது என்னவென்று தெரியாத சூழ்நிலை ஏற்படுத்தப்பட்டு விட்டது. தேடல்களும், மனித ஆர்வங்களும் சர்வநாசம் செய்யப்பட்டுவிட்டன. சிதறடிக்கப்பட்டு விட்டன. இனங்கள் பல்வேறு சமூகங்களுக்கிடையே பெரும் பிளவுகள் ஏற்படுத்தப்பட்டுவிட்டன. இந்நிலை ஆழிப் பேரலை அனர்த்தங்களை விட மோசமானவை.

புதிய ஒழுங்கொன்றை நோக்கி இலங்கை தனது பயணத்தை ஆரம்பிக்கவேண்டும், அதனை இப்போதே ஆரம்பிக்கப்பட வேண்டும். இலங்கை மக்களின் முகங்களில் மலர்ச்சியும் நம்பிக்கையும் மன வலிமையும் ஏற்படுத்துவதற்காக பீனிக்ஸ் போன்று உயிர்த்தெழ வேண்டிய வரலாற்றுச் சந்தில் நாம் நின்றுகொண்டிருக் கிறோம், இலங்கையின் தமிழ் சிங்கள முஸ்லிம் மக்கள் மத்தியிலுள்ள தொழிலாளர்கள், விவசாயிகள், கல்விமான்கள், தொழில்நுட்ப வல்லுனர்கள், மாணவர்கள் அனைவரும் அறிவுபூர்வமாக சிந்தித்து சுபிட்சமான இலங்கை ஒன்றை நோக்கிய பயணத்தை ஆரம்பிக்கவேண்டிய சவாலை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

படுகொலைகளற்ற, சிறுவர் சிறுமியர் சிரித்து மகிழும் அமைதி பூத்துக் குலுங்கும் ஒரு புதிய நாடு எமக்கு வேண்டும். தென்னாசியா அளவில் நாம் மக்கள் ஒன்றிணைந்து செயல் படுவதற்கான முழு மூச்சான முயற்சிகள் வேண்டும். சீனாவும், இந்தியாவும், பாகிஸ்த்தானும் உறவுகளில் புதிய அத்தியாயங்களை ஆரம்பித்துள்ளன.

எமது குறுகிய மன பௌதீக இடைவெளிகளை தகர்தெறிந்து கிணற்றுத் தவளை சிந்தனைகளிலிருந்து விடுபட்டு தேங்கியழுகி நாற்றம் வீசும் குட்டை அல்லது ஏரியின் நிலையிலிருந்து விடுபட்டு சலசலத்து ஓடும் பிரவாகமாக மாறுவோம், நிமிர்ந்து நிற்போம் விரிந்த உலகத்தை தரிசிப்போம் கண்ணுக்கு முன்னால் தெரியும் துன்பமும் அவலமும் நிறைந்த யதார்த்தத்தை மாற்றுவோம். புதிய ஒழுங்கொன்றை ஏற்படுத்தி எம்மை அர்ப்பணிப்போம்.

தி.ஸ்ரீதரன்
செயலாளர்
ஈ.பி.ஆர்.எல்.எப் - பத்மநாபா

**ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி - பத்மநாபா**